


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 08.10.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- இந்தியாவின் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்காக **(ககன்யான் திட்டம்),** இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு **(ISRO) மற்றும் ரஷ்ய விண்வெளித்துறை (ரோஸ்காஸ்மோஸ்) ROSCOSMOS** இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
  - மேலும், **இந்தியா மற்றும் ரஷ்யா** நாடுகளுக்கிடையே அணுத் துறையில் ஒத்துழைப்பு, இரயில்வே துறை மேம்பாட்டுக்கான ஒத்துழைப்பு போன்றவற்றில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளன.

- **ரிசர்வ் வங்கியானது** மையப்படுத்தப்பட்ட தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை செயல்படுத்த, **இன்போசிஸ், டாடா கன்சல்டன்ஸி சர்வீஸ், கேப்ஜெமினி டெக்னாலஜி, இண்டியா, ஐ.பி.எம்-இந்தியா, லார்சன் & ட்யூப்ரோ இன்.்.போ டெக்** ஆகிய ஐந்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை தேர்வு செய்துள்ளது.
- குறிப்பு:
  - இந்திய ரிசர்வ் வங்கி **(Reserve Bank of India) 1935** இல் தொடங்கப்பட்ட மத்திய வங்கியாகும்.
  - **1949ல் இவ்வங்கியானது** நாட்டுடைமை ஆக்கப்பட்டது.
  - இதன் தற்போதைய ஆளுநர் - உர்ஜித் பட்டேல்

- மத்திய பிரதேசத்தில் பிரதம மந்திரி ஊரக சாலைகள் திட்டத்தின் **(PMGSY – Pradhan Mantri Gram Sadak Yojana)** கீழ் **2800 கி.மீ நீளமுள்ள சாலைகளை** மேம்படுத்துவதற்கு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கும் மத்திய அரசுக்கும் இடையே 110 மில்லியன் டாலர் (சுமார் ரூ.816 கோடி) கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
  - இந்த ஊரகச் சாலைகள் எல்லாப் பருவ காலத்துக்கும் ஈடுகொடுக்கும் வகையில் மேம்படுத்துவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.

- இந்திய விமானப்படை தொடங்கப்பட்ட 86-ஆவது ஆண்டு விழா

உத்திரப்பிரதேச மாநிலத்தின் **ஹிண்டன் (HINDON) விமானப் படை** நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

- இந்திய இராணுவத்தின் முப்படையில் ஒன்றான விமானப்படை, உலக அளவில் சக்தி வாய்ந்த படைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

- குறிப்பு:
  - இந்திய விமானப் படையானது, **1932-அக்டோபர் 08,ல் Royal Indian Air Force** என்ற பெயரில் தொடங்கப்பட்டது.
  - **1950ல் இதன் பெயரை Indian Air Force** என மாற்றம் செய்யப்பட்டது.

- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமானது விமான நிலையங்களில் பயணிக்களுக்கான முக அங்கீகார அடிப்படையிலான டிஜிட்டல் செயல்பாட்டுக் கொள்கையான **"Digi Yatra" (டிஜி யாத்ராவை)** வெளியிட்டுள்ளது.
  - இந்த முன் முயற்சியானது காகிதமற்ற மற்றும் தடங்கலற்ற விமானப் பயணத்தை ஊக்குவிக்க முற்படுகிறது.

## உலக நிகழ்வுகள்

- **JIMEX-18 → இந்தியா மற்றும் ஜப்பான்** நாடுகளின் கடற்படைக்களுக்கிடையேயான கூட்டுப் போர் பயிற்சியின் (JIMEX-18) மூன்றாவது பதிப்பு அக்டோபர் 07 முதல் 15 வரை இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ளது.
  - இப்பயிற்சியில் இந்தியாவின் ஆயுதம் தாங்கிய போர் கப்பான **ஐ.என்.எஸ். சத்புரா (INS-Satpura),** நீர் மூழ்கி எதிர்ப்பு திறன் கொண்ட **ஐ.என்.எஸ்-காத்மட் (INS-Kadmat)** மற்றும் **ஐ.என்.எஸ்.-சக்தி (INS-Shakti)** ஆகியவை ஈடுபடவுள்ளன.

- குறிப்பு:
  - JIMEX--ன் இரண்டாவது பதிப்பு 2013-ன் ஆண்டில் சென்னையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™

## விளையாட்டு நிகழ்வுகள்

- வங்க தேசத்தில் நடைபெற்ற **19 வயதிற்குட்பட்டோருக்கான** ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில், இந்திய அணி, இலங்கை அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

## விருதுகள்

- நாட்டில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு **ஸ்வச் சரவெக்ஷன் கிராமின் விருது** – 2018 **Swachh Survekshan Grameen Award** சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது.
  - இவ்விருதுகளின் பட்டியலில் சிறந்த மாநிலமாக **ஹரியானாவும்** அதனைத் தொடர்ந்து **குஜராத் மற்றும் மகாராஷ்டிரா** ஆகியவை உள்ளது.
  - சிறந்த மாவட்டமாக **மகாராஷ்டிராவின் சதாரா** மாவட்டமும், அதனைத் தொடர்ந்து **ரேவாரி (ஹரியானா)** மற்றும் **பெடப்பள்ளி (தெலுங்கானா)** ஆகியவையும் இடம் பிடித்துள்ளன.

## நியமனங்கள்

- அமெரிக்காவின் உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு **பிரெட் கவனாக்கை (Brett Kavanaugh)** அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பரிந்துரை செய்தார்.
  - இந்நிலையில் அமெரிக்க பாராளுமன்ற (Senate) சபையில் நிரந்தர உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஓட்டெடுப்பில் பிராட் கவான் வெற்றி பெற்று, அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.